## நிகழ்நிலை விளம்பரம்

# தேசிய கல்வி நிறுவகம் - மகரகம

**பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2025/2026**

**Diploma in School Management (DSM) - 2025/2026**

**தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பாடநெறியின் காலம்** : பன்னிரெண்டு மாதங்கள் (வார இறுதி நாட்கள்) நிகழ்நிலை ஊடான இரு பருவங்களை (Semesters) கொண்ட கல்விசார் செயன்முறைகள் நடைபெறும்.

**பாடநெறி நடைபெறும் இடம்** : தொழில்வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை,

கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்கை.

**பாடநெறியின் மொழிமூலம்** : சிங்களம் / தமிழ்

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா 50,000/- (சமமான இரண்டு தவணைகளில் செலுத்தலாம்)
விண்ணப்பக் கட்டணம் ரூபா 1,500/-,
பதிவுக் கட்டணம் ரூபா 1,000/-

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப இறுதி திகதியன்று கீழ்வரும் சகல தகைமைகயையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. ஆகக் குறைந்த தொழில் தகைமையாக கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் அல்லது ஆசிரியர் பயிற்சி சான்றிதழுடன்,

2. இலங்கை கல்வி நிர்வாக சேவை / இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை/ இலங்கை அதிபர் சேவை அல்லது பதில் கடமைபுரியும் பாடசாலை அதிபராக இருத்தல் அல்லது பிரிவேனாவொன்றின் தலைவர் அல்லது பாதி அரசாங்க (Semi Government) அந்தஸ்துள்ள கல்வித் தாபனமொன்றின் தலைவராக இருத்தல்.

**மேலுள்ள கல்வி/ தொழில் தகைமைகளுடன்**

3. கற்பித்தலில் குறைந்தது 4 வருட அனுபவமும் அவற்றில் குறைந்தது ஒரு வருடம் 'நிர்வாகம் மற்றும் மேற்பார்வை' கடமைகளில் அனுபவம் கொண்டிருத்தல் (நிர்வாகம் மற்றும் மேற்பார்வை கடமைகளில் அனுபவமிருத்தலை உறுதி செய்வதற்கு நேர்முகப் பரீட்சையின் போது வலயக் கல்விப் பணிப்பாளர்/ திணைக்களத் தலைவர் வழங்கிய கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

4. தெரிந்தெடுக்கப்படும் கல்வியாண்டில் (2025/2026) தேசிய கல்வி நிறுவகத்திலோ அல்லது வேறும் பல்கலைக்கழகமொன்றில் அல்லது வேறெந்தவொரு கல்வித் தாபனமொன்றில் எந்தவொரு பாடநெறியையும் மேற்கொள்ளாயிருத்தல்.

**பாடநெறிக்கு தெரிவு செய்யப்படல்**

நிறுவனத்தால் பாடநெறிக்கு உள்வாங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையை விட விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் நுழைவுக்கான போட்டிப்பரீட்சை நடாத்தப்பட்டு, அப்பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முக தேர்வின் மூலம் பாடநெறிக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய வழிமுறைகள்**

1.0 விண்ணப்படிவத்தை பூரணப்படுத்தும் முறை (exams.nie.lk/intakes/new) என்னும் இணயத்தளத்தில் பிரவேசித்து (Sign up) குறித்த விபரங்களைக் கொண்டு நிரப்புக. தொடர்ந்து (exams.nie.lk/info/register-as-a-user) என்ற இணையத்தள முகவரி மூலம் உங்களுக்கு கிடைக்கும் பயனாளி இலக்கத்தைக் (User ID) குறித்துக் கொள்க. எதிர்கால பயன்பாட்டுக்காக கடவுச் சொல்லையும் (Password) கவனமாக குறித்து வைத்துக்கொள்ளவும்.

2.0 இணையத்தளத்தின் வலது பக்கத்தின் கீழ்ப் பகுதியில் பயனாளி இலக்கத்தையும் (User ID) கடவுச் சொல்லையும் (Password) பயன்படுத்தி பிரவேசிக்கவும் (Login).

2.1 உங்கள் சுயவிபரங்கள் பற்றிய விபரங்களை (User Profile) இற்றைப்படுத்துக (Update).

- தனிப்பட்டத் தகவல்கள்
- சேவைத் தகவல்கள்
- கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

2.2 பின்னர் exams.nie.lk/intakes/new என்ற இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து Diploma in School Management - 2025/ 2026 பாடநெறியை தெரிவு செய்க.

2.3 பாடநெறியின் பெயருக்கு அருகில் காணப்படும் My Application ஐ தெரிவு செய்து விண்ணப்படிவத்தை பூரணப்படுத்துங்கள். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை (exams.nie.lk/info/applying-for-new-enrollments) என்னும் இணையத்தள முகவரியிலிருந்துப் பெற்றுக்கொள்ளாம்.

2.4 உங்களுக்கு கிடைக்கும் விண்ணப்பப்பத்திர உசாவுகை இலக்கத்தை (Application Reference Number) குறித்து வைத்துக்கொள்க.

3.0 **விண்ணப்படிவத்தை பதிவிறக்குதல் (Download Application)**

நிகழ்நிலை விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்த பிறகு. விண்ணப்படிவத்தின் பிரதியை உங்கள் உசாவுகை எண்ணுடன் (Reference Number) அச்சிட்டு நிறுவன தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான மூலபற்றுச்சீட்டு பிரதி மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட கீழ்முள்ள ஆவணங்களுடன் **பணிப்பாளர், தொழில்வாண்மைவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை, கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்கை** (The Director, Department of Professional Development and Educational Management, Faculty of Education Leadership Development and Management, National Institute of Education, Meepe Junction, Padukka) என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அஞ்சல் செய்யப்படல் வேண்டும்.

1. கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் அல்லது ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்
2. பாடநெறிக்காக கோரப்பட்ட சேவைக்குரிய நியமனக் கடிதம்
3. சேவைச் சான்றிதல்

**குறிப்பு:** கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘ DSM - 2025/ 2026 - Tamil Medium’ எனக் குறிப்பிடுக.

4.0 மேலதிக விபரங்களுக்கு சிங்கள மொழிமூலமாயின் பாடநெறி இணைப்பாளர் திருமதி M.M.K.J. மணத்துங்க அவர்களின் 0117601307/ 0778425488 ஆகிய இலக்கங்களுக்கும், தமிழ் மொழிமூலமாயின் பாடநெறி இணைப்பாளர் திரு தியாகராஜ் ரவிச்சந்திரன் அவர்களின் 0117601315/ 0779697879 ஆகிய இலக்கங்களுக்கும், தொழிநுட்ப உதவிகளாயின் திரு. மாதவ தென்னகோன் அவர்களின் 0117601777/ 0117601776 ஆகிய இலக்கங்களுக்கும் வார நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையிலான கால எல்லையில் தொடர்புகொள்ளவும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 15.11.2025**

**குறிப்பு : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர், எந்த காரணத்தை கொண்டும் விண்ணப்பத் திகதி மீண்டும் நீடிக்கப்படமாட்டாது என்பதை அறியத் தருகின்றேன்.**

பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரண (PhD)
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம